## ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு

# இரவு 1 மணி வரை மெட்ரோ ரயில் சேவை

**சென்னை, டிச. 31:** ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு இன்று இரவு 1 மணி வரை மெட்ரோ ரயில் இயக்கப்படும் என நிர்வாகம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில்வே நிர்வாகம் நேற்று வெளியிட்ட அறிவிப்பு:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டத்தை ஒட்டி பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளின் வசதிக்காக இன்று (31ம் தேதி) மெட்ரோ ரயில் சேவை இரவு 11 மணியில் இருந்து நாளை அதிகாலை 1 மணி வரை 28 நிமிட இடைவெளியில் இயக்கப்படுகிறது.

இதேபோல், கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய மெட்ரோ ரயில் நிறுவனம், வாகன இணைப்பு சேவையை கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் நேற்று முதல் தொடங்கியுள்ளது. மெட்ரோ வாகன இணைப்பு சேவை தற்போது கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து டி.எல்.எப் வரை ₹10 கட்டணத்தில் இயக்கப்படுகிறது. ஏற்கனவே இயங்கும் ஷேர் ஆட்டோ சேவைகளுடன் கூடுதலாக சீருந்து இணைப்பு சேவையும் கிண்டி மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது.